பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**26 03 2026** **7 15**

வியாழக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. அசாம், கேரளம், புதுச்சேரி சட்டப்பேரவைத் தேர்தலுக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள வேட்புமனுக்களை திரும்பப் பெற இன்று கடைசி நாளாகும்.

2. ராமநவமி இன்று கொண்டாடப்படுவதையொட்டி குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

3. மேற்குவங்க சட்டப்பேரவைத் தேர்தலில் பிஜேபி சார்பில் போட்டியிடும் 19 பேர் கொண்ட 3வது வேட்பாளர் பட்டியலை அக்கட்சி வெளியிட்டுள்ளது.

4. அமெரிக்கா முன்வைத்த 15 அம்ச பரிந்துரைகளை ஈரான் நிராகரித்துள்ளது.

5. இத்தாலியில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் கலியந்தா பூனச்சா - தாய்லாந்தின் இசாரோ இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

அசாம், கேரளம், புதுச்சேரி சட்டப்பேரவைத் தேர்தலுக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள வேட்புமனுக்களை திரும்பப் பெற இன்று கடைசி நாளாகும்.

வேட்பு மனுக்கள் பரிசீலனைக்குப் பிறகு கேரளத்தில் 985 வேட்பாளர்களும், அசாமில் 789 வேட்பாளர்களும், புதுச்சேரியில் 366 வேட்பாளர்களும் தற்போது வரை களத்தில் உள்ளனர்.

கோவாவில் Ponda, கர்நாடகாவில் Bagalkot, Davanagare தெற்கு, நாகாலாந்தில் Koridang, திரிபுராவில் Dharmanagar சட்டப்பேவைத் தொகுதிகளுக்கு நடைபெற உள்ள இடைத்தேர்தலுக்கு தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனுக்களை விலக்கிக்கொள்வதற்கும் இன்று கடைசி நாளாகும்.

அத்தொகுதிகளில் வேட்புமனு பரிசீலனைக்குப் பிறகு தற்போது வரை 66 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர்.

வாக்குப்பதிவு அடுத்த மாதம் 9ஆம் தேதி நடைபெறுகிறது.

வாக்கு எண்ணிக்கை மே மாதம் 4ஆம் தேதி மேற்கொள்ளப்படுகிறது.

இதற்கிடையே கேரளத்தில் பல்வேறு கட்சிகளின் சார்பில் பிரச்சாரம் நடைபெற்று வருகிறது.

அம்மாநில முதலமைச்சரும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவருமான திரு. பினராயி விஜயன் இன்று கோட்டையத்தில் வாக்கு சேகரித்தார்.

காங்கிரஸ் சார்பில் அக்கட்சியின் தலைவர் திரு. மல்லிகார்ஜுன் கார்கே, திரு. சச்சின் பைலட் ஆகியோர் கோழிக்கோடு கடற்கரையில் பிரச்சாரத்தில் ஈடுபட்டனர்.

பிஜேபி சார்பில் அக்கட்சியின் மூத்த தலைவரும், பிரதமருமான திரு. நரேந்திர மோடி வரும் 29ஆம் தேதியன்று திரிசூர் மற்றும் பாலக்காட்டில் வாக்கு சேகரிக்கிறார்.

<<<<>>>>

ராமநவமி இன்று கொண்டாடப்படுகிறது. இந்நாளையொட்டி குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு வெளியிட்டுள்ள செய்தியில், பகவான் ராமரின் வாழ்க்கைப் பயணம் உண்மை, நீதி ஆகியவற்றை நாம் பின்பற்றுவதற்கு வழிகாட்டுவதாக கூறியுள்ளார்.

சமூகத்திற்கு நாம் கடமையாற்ற அவரது வாழ்க்கை நம்மை ஊக்குவிக்க வேண்டும், அவரது லட்சியங்கள் நம் கலாச்சாரத்தின் அடித்தளமாக விளங்குகின்றன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதன்படி வாழ நாம் முயற்சிக்க வேண்டும் என்றும் குடியரசுத்தலைவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அமைச்சரவை உடான் விரிவாக்கத் திட்டத்திற்காக ஒப்புதல் அளித்ததன் மூலம் மக்களுக்கு வசதியான மற்றும் எளிதான விமானப் பயண அனுபவம் கிடைக்கும் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து சமூக வலைத்தில் பதிவிட்டுள்ள அவர், **28** ஆயிரத்து **840** கோடி ரூபாய் மதிப்பிலான இத்திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கப்பட்டதன் மூலம் **100** புதிய விமான நிலையங்களும், **200** ஹெலிகாப்டர் தளங்களும், **441** விமான ஓடுபாதைகளும் கட்டப்படும் என்று கூறியுள்ளார்.

<<<<>>>>

மூன்றாம் பாலினத்தவர் உரிமைகள் பாதுகாப்பு திருத்த மசோதா நாடாளுமன்றத்தில் நிறைவேறியது.

முன்னதாக மக்களவையில் இம்மசோதாவிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட நிலையில், நேற்று மாநிலங்களவையில் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

இம்மசோதா குறித்த விவாதத்திற்கு பதிலளித்துப் பேசிய மத்திய சமூகநீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை அமைச்சர் டாக்டர் வீரேந்திர குமார், மூன்றாம் பாலினத்தவர் நலனில் அரசு அக்கறை கொண்டுள்ளதாகத் தெரிவித்தார்.

இம்மசோதாவில் அவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டு கண்ணியத்தை அளிப்பதற்கான விதிகள் இடம்பெற்றுள்ளதாக அவர் கூறினார்.

மூன்றாம் பாலினத்தவர்களை சமூகத்தின் மைய நீரோட்டத்திற்கு கொண்டு வரவும், அவர்களுக்கு எதிரான பாகுபாட்டை தடுக்கவும் தேசிய ஜனநாயக கூட்டணி அரசு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக அமைச்சர் டாக்டர் வீரேந்திர குமார் குறிப்பிட்டார்.

<<<<>>>>

மகாகராஷ்டிர மாநிலத்தில் எரிபொருள் தட்டுப்பாடு ஏதும் இல்லை என்றும், அதுகுறித்த வதந்திகளை நம்ப வேண்டாம் என்றும் அம்மாநில அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

சங்லி, சதாரா, ஜால்னா, எவத்மால் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் எரிபொருள் தட்டுப்பாடு புரளி காரணமாக அங்குள்ள

பெட்ரோல் நிலையங்களில் எரிபொருள் வாங்க மக்கள் நீண்ட வரிசையில் காத்திருப்பதை அடுத்து அரசு இவ்வாறு கூறியுள்ளது.

எரிபொருள் போதுமான அளவு இருப்பில் உள்ளதாக ஜால்னா மாவட்ட ஆட்சியர் அஷ்மிதா மிட்டல் தெரிவித்துள்ளார்.

எண்ணெய் நிறுவனங்களுக்கான கட்டணத்தை சில பெட்ரோல் நிலையங்கள் நிலுவையில் வைத்திருப்பதால், தற்காலிகமாக அங்கு எரிபொருள் விநியோகம் நிறுத்தப்பட்டதாக அவர் கூறியுள்ளார்.

அதேபோல் சமையல் எரிவாயு சிலிண்டர் இருப்பு போதுமான அளவு உள்ளதாக எவத்மால் மாவட்ட நிர்வாகம் தெரிவித்துள்ளது.

எனவே சமூக வலைதளத்தில் பரவும் தவறான தகவல்களை மக்கள் நம்ப வேண்டாம் என்றும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

<<<<>>>>

மேற்குவங்க சட்டப்பேரவைத் தேர்தலில் பிஜேபி சார்பில் போட்டியிடும் 19 பேர் கொண்ட 3வது வேட்பாளர் பட்டியலை அக்கட்சி வெளியிட்டுள்ளது.

அதன்படி கூச்பெகர் தெற்கு தொகுதியில் திரு. ரத்தீந்திரநாத் போஸ், மெதினிபூர் தொகுதியில் டாக்டர் சங்கர் குஜ்ஜயிட், ஹவுரா மத்திய தொகுதியில் திரு. பிப்லப் மண்ட்லா, **Panihati** தொகுதியில்

திருமதி ரத்னா தேப்நத் ஆகியோர் வேட்பாளர்களாக நிறுத்தப்பட்டுள்ளனர்.

<<<<>>>>

மேற்குவங்க சட்டப்பேரவைத் தேர்தலையொட்டி அங்குள்ள **294** தொகுதிகளின் தேர்தல் நடத்தும் அலுவலர்களுக்கு தேர்தல் ஆணையத்தின் சார்பில் நேற்று பயிற்சி அளிக்கப்பட்டது.

ஜல்பைகுரி, மால்டா, பிரசிடென்சி, பர்த்வான், மெதினிபூர் ஆகிய மண்டலங்களின் தலைமையகங்களில் இப்பயிற்சி நடைபெற்றது.

வேட்புமனு தாக்கல், பரிசீலனை, தகுதிகள் மற்றும் தகுதி இழப்புகள், தேர்தல் நடத்தை விதிமுறைகள், மனுக்களை திரும்பப் பெறுதல், சின்னம் ஒதுக்கீடு, வாக்குப் பதிவு மற்றும் வாக்கு எண்ணிக்கை உள்ளிட்ட அனைத்து நிலைகள் குறித்தும் தேர்தல் ஆணையத்தின் முதன்மை பயிற்சியாளர்கள் மற்றும் மூத்த அதிகாரிகள் விளக்கம் அளித்தனர்.

<<<<>>>>

கடந்த நிதியாண்டில் தெற்கு மத்திய ரயில்வே இதுவரை இல்லாத அளவாக **144** புள்ளி இரண்டு நான்கு நான்கு மில்லியன் டன் சரக்குகளை கையாண்டு சாதனை படைத்துள்ளது.

இதில் நிலக்கரி மற்றும் சிமெண்ட் பொருட்கள் பெருமளவில் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

இரும்புத் தாது, உரங்கள், உணவு தானியங்கள், பெட்டகங்கள் மற்றும் இதர பொருட்களையும் பெருமளவில் கையாண்டுள்ளதாக தெற்கு மத்திய ரயில்வே தெரிவித்துள்ளது.

<<<<>>>>

அமெரிக்கா முன்வைத்த 15 அம்ச பரிந்துரைகளை ஈரான் நிராகரித்துள்ளது.

இதையடுத்து மேற்காசியாவில் நிலவும் மோதல்களை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான முயற்சிகளில் பெரும் பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

அமெரிக்காவின் இந்த பரிந்துரைகள் ஏற்கக் கூடியது அல்ல என்பதால் ஈரான் அரசு அதை நிராகரித்து விட்டதாக அந்நாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

ஈரான் தனது அணுசக்தி திட்டத்தை குறைத்துக்கொள்ள வேண்டும், ஏவுகணை திறன்களை வரைமுறைப்படுத்த வேண்டும், ஹோர்முஸ் நீரிணையை சர்வதேச கப்பல் போக்குவரத்திற்காக

மீண்டும் திறக்க வேண்டும் போன்ற கோரிக்கைகளை அமெரிக்கா முன்வைத்திருந்தது.

இந்நிலையில் ஈரான் தனது 5 அம்ச பரிந்துரைகளை வெளியிட்டுள்ளது.

அதன்படி ஆக்கிரமிப்பு மற்றும் படுகொலைகளை உடனடியாக முடிவுக்கு கொண்டு வருதல், எதிர்கால ராணுவ நடவடிக்கைகளை கைவிடுதல், போரால் ஏற்பட்ட இழப்பீடுகளை செலுத்துதல்,...

... ஹோர்முஸ் நீரிணை பகுதியில் ஈரானின் இறையாண்மையை முழுமையாக அங்கீகரித்தல் போன்ற கோரிக்கைகளை ஈரான் வெளியிட்டுள்ளது.

இதற்கிடையே ஈரான் போரை நிறுத்த வேண்டும் என்று எப்போது விரும்புகிறதோ, தங்களது நிபந்தனைகள் எப்போது நிறைவேறுகிறதோ அப்போதுதான் போர் முடிவுக்கு வரும் என்று ஈரான் நாட்டு அரசு உயர் அதிகாரி ஒருவர் அந்நாட்டு தொலைக்காட்சியில் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவுடன் ஈரான் நேரடிப் பேச்சுகளில் ஈடுபடவில்லை என்றும், அமெரிக்கா தமக்குத் தாமே பேச்சுகளில் ஈடுபட்டு வருவதாகவும் ஈரான் உயர் அதிகாரி கூறியுள்ளார்.

<<<<>>>>

அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப், சீன அதிபர் திரு. Xi Jinping உடனான தமது சந்திப்பை மே மாதத்திற்கு ஒத்திவைத்துள்ளதாக அறிவித்துள்ளார்.

ஈரானுக்கு எதிராக அமெரிக்க ராணுவ நடவடிக்கையை அடுத்து இம்முடிவு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

பெய்ஜிங்கில் மே மாதம் 14 மற்றும் 15ஆம் தேதிகளில் சீன அதிபரை சந்திக்க உள்ளதாக திரு. ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

இத்தாலியில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் கலியந்தா பூனச்சா - தாய்லாந்தின் இசாரோ இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்றில் இந்த இணை, 6-4, 6-3 என்ற செட் கணக்கில் நெதர்லாந்தின் Jarno Jans - செக் குடியரசின் David Poljak இணையை வென்றது.

<<<<The End>>>>